மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மற்றும் அதை சுற்றியுள்ள நகராட்சிகள், மதுரை, சேலம், கோயம்பத்தூர், திருச்சி, வேலூர், ஈரோடு, திருநெல்வேலி, தூத்துக்குடி, திருப்பூர் போன்ற 10 நகரங்கள் ஆகும்.

(முற்பகல் 9-50.)

ஏலகிரி மலையை சுற்றுலா மையமாக்கல்.

177—(*வினா எண் 135)—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏலகிரி மலையை சுற்றுலா மையம் ஆக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்பொழுது செயற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி மலை மாவட்ட உலாத் தலமாக 1980 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மேம்பாட்டு பணிகளுக்காக சுமார் ரூ. 8 இலட்சம் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்ளக் கடன்.

178—(*வினா எண் 599)—திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர்கள் வீடு கட்டிக்கொள்வதற்காக வழங்கப்பட்டு வந்த கடன் தற்போது நிறுத்தப்பட்டுவிட்டது என்பதை அரசு அறியுமா ?

(ஆ) கடனைத் தொடர்ந்து வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?